289

DTERT
JUL 2010
CHENNAI

## சுருக்கம்

ஆசிரியர் கல்வி – 2010–2011 ஆம் ஆண்டு உடற்கல்வி ஆசிரியர் பட்டயப் பயிற்சி (Diploma in Physical Education) – ஒற்றைச் சாளரமுறை மாணவர் சேர்க்கைக்கு பதிலாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களே நேரடியாக மாணவர் சேர்க்கை செய்ய – அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

9373

---

பள்ளிக்கல்வித்(பி)துறை

அரசாணை (1டி) எண்.200 — நாள்:01.07.2010
திருவள்ளுவராண்டு 2041
ஆனி 17

படிக்கப்பட்டது:

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர், சென்னை–6 கடிதம் ந.க.எண்.8502/ஈ3/2008, நாள்.18.06.2010.

ஆணை:-

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர், தமிழ்நாட்டில் தற்போது நான்கு தனியார் சுயநிதி உடற்கல்வி ஆசிரியர் பட்டயப் பயிற்சி (Diploma in Physical Education) நிறுவனங்கள் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தின் கீழ் இயங்கி வருகின்றன என்றும், இந்நிறுவனங்களுக்கு 2001 ஆம் கல்வி ஆண்டு முதல் ஒற்றைச் சாளர முறையில் மாணவர்கள் சேர்க்கை செய்யப்பட்டனர் என்றும், நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களை (Management Quota) அந்நிறுவனங்களே பூர்த்தி செய்து வந்தன என்றும், 2008– 2009ஆம் கல்வி ஆண்டில் 167 விண்ணப்பங்கள் மட்டுமே உடற்கல்வி ஆசிரியர் பட்டயப் பயிற்சிக்கு பெறப்பட்டன என்றும், இதில் உடற்கல்வி தேர்விற்கு 49 விண்ணப்பதாரர்கள் மட்டுமே கலந்து கொண்டனர் என்றும், இவர்களில் 20 மாணவ, மாணவியர் மட்டுமே பயிற்சியில் சேர விருப்பம் தெரிவித்திருந்தனர் என்றும் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. ஒற்றைச் சாளர முறையில் அரசு நிரப்பும் இடங்களின் எண்ணிக்கையை சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் ஒப்புதல் பெற்ற பின்பே முடிவு செய்ய வேண்டும் என சென்னை உயர்நீதி மன்றம் அளித்துள்ள தீர்ப்பின் அடிப்படையில், 2009–2010ஆம் கல்வி ஆண்டில் அப்போது செயல்பட்டு வந்த நான்கு உடற்கல்வி ஆசிரியர் பட்டயப் பயிற்சி நிறுவனங்களும் தங்களிடம் உள்ள அனைத்து 240 இடங்களையும் (Seats) தாங்களாகவே நிரப்பிக் கொள்வதாக எழுத்து மூலம் தெரிவித்ததால் கடந்த ஆண்டு ஒற்றைச் சாளர முறை நடைபெறவில்லை என்றும் இயக்குநர் தெரிவித்துள்ளார். 2010–2011ஆம் கல்வி ஆண்டில் தற்போது உள்ள நான்கு உடற்கல்வி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களும் ஒற்றைச் சாளர முறையில் அரசு நிரப்பும் இடங்களின் எண்ணிக்கையை குறிப்பிட்டு ஒற்றைச் சாளர முறை நடத்தி மாணவர்களை கொடுக்கும்படி கடிதங்கள் அளித்துள்ளன என்றும், இதன்படி அரசு

291

ஒதுக்கீடாக நான்கு நிறுவனங்களும் ஒப்புக் கொண்டுள்ள 122 இடங்களை ஒற்றைச் சாளர முறையில் பூர்த்தி செய்வதற்கு விண்ணப்பங்கள் அச்சிடுதல், செய்தித்தாள்களில் விளம்பரம் கொடுத்தல், ஒற்றைச்சாளர முறையில் மையங்களை அமைத்தல் போன்றவைகளுக்கென ஏறத்தாழ நான்கு இலட்சம் ரூபாய் செலவிட வேண்டி உள்ளது என்றும் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மேலும், அதிக மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட பிரிவிற்கு விண்ணப்பிக்கும்போது மதிப்பெண்களின் அடிப்படையில் வகைப்படுத்தி தெரிவு செய்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பப்பட வேண்டும் என்பதே ஒற்றைச்சாளர முறையின் நோக்கம் எனவும், நிறுவனங்களில் உள்ள இடங்களை விட மிகக் குறைந்த அளவு எண்ணிக்கையில் மாணவர்கள் விண்ணப்பிக்கும்போது ஒற்றைச்சாளர முறை நடத்துவது அரசுக்கு காலம் மற்றும் நிதி இழப்பை ஏற்படுத்தும் எனவும், எனவே, 2010–2011 ஆம் கல்வி ஆண்டில் உடற்கல்வி மாணவர் சேர்க்கைக்கு ஒற்றைச் சாளர முறை தேவையில்லை எனவும், சுயநிதி உடற்கல்வி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் அனுமதிக்கப்பட்டுள்ள இடங்களில் சம்பந்தப்பட்ட உடற்கல்வி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களே அரசு விதிமுறைகளை பின்பற்றி சேர்க்கை செய்யலாம் எனவும், மாணவர் சேர்க்கையினை ஒவ்வொரு கல்வி ஆண்டும் ஜீலை 31ஆம் தேதிக்குள் முடித்து, சேர்க்கை செய்யப்பட்ட மாணவர் பட்டியலுக்கு சார்ந்த மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வரிடம் ஆகஸ்ட் 31ஆம் தேதிக்குள் ஒப்புதல் பெற வேண்டும் என்பதன் அடிப்படையில் அரசாணை வழங்குமாறும் இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலனை செய்து அதனை ஏற்று, 2010–2011ஆம் கல்வியாண்டில் சுயநிதி உடற்கல்வி ஆசிரியர் பட்டயப் பயிற்சி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கைக்கு ஒற்றைச் சாளரமுறை தேவையில்லை எனவும், அனுமதிக்கப்பட்ட இடங்களில் சம்பந்தப்பட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களே அரசு விதிமுறைகளை பின்பற்றி மாணவர் சேர்க்கை செய்யவும். மாணவர் சேர்க்கையினை ஒவ்வொரு கல்வி ஆண்டும் ஜீலை 31ஆம் தேதிக்குள் முடித்து, சேர்க்கை செய்யப்பட்ட மாணவர் பட்டியலுக்கு சார்ந்த மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வரிடம் ஆகஸ்ட் 31ஆம் தேதிக்குள் ஒப்புதல் பெற வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஆணை வழங்கலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம.குற்றாலிங்கம்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர்,
சென்னை – 6

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.